ments to the panchayats. This is generally done promptly and no cases of delays or difficulties have been reported. Cesses are also payable in advance based on the average of previous years.

The panchayats are kept informed of their financial position through monthly statements and pass books and there could, therefore, be no difficulty for the panchayats to find out the balance of funds available at their credit. The Government have also taken all possible steps to have free flow of funds to the panchayats, so that they may take up the execution of work in their panchayats without any difficulties.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த மாதிரியான புகார்கள் க்ளாஸ ஒன் பஞ்சாயத்துக்களில் இருப்பதால் அதை நிவர்த்திக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத : சர்க்கார் தரப்பில் இந்தமாதிரியான புகார்களுக்கு இடமில்லாதபடி செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட எந்த இடத்திலாவது இந்த மாதிரியான புகார் இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் துரிதமாக அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பஞ்சாயத்துக்களுக்குச் சேரவேண்டிய தொகை மாதா மாதம் அட்ஜஸ் செய்யப்படுகிறது என்றார். மூன்று மாதம், நான்கு மாதம் ஆகியும்கூட பஞ்சாயத்துகளுக்குச் சேர வேண்டிய தொகை அட்ஜஸ் செய்யப்படாமல் இருக்கிறது. அதனால் ஆசிரியர்களுக்கு மாதாமாதம் கொடுக்கப்படவேண்டிய சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அவர் சொன்னது போல மாதாமாதம் அட்ஜஸ் செய்துவிட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சர்க்கார் உத்தரவு அப்படிக் கூறுகிறது. எங்காவது இப்படி அந்த அந்த மாதத்திற்குள் அட்ஜஸ் ஆகாமல் இருந்தால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : பஞ்சாயத்துக்கள் செலுத்துகின்ற தொகை அவ்வப்போது பாஸ் புக்கில் குறிக்கப்படுகிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பாஸ் புக்குகளில் பதிவு செய்யப்படுகிறது என்றுதான் கேள்விப்படுகிறேன்.

Collection of panchayat revenue

* 6 *Q.*—Sri K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to apply the Revenue Recoveries Act for the collection of arrears due to the panchayats?

The Hon. Sri S. M. A. MAJID : The Government are examining the question of extending the provisions of the Revenue Recovery Act for the realisation of the arrears of panchayat taxes.

Necessary rules have been issued already under the Madras Panchayats Act for the procedure relating to the collection of taxes due to panchayats, and collection is being made with reference to the procedure laid down in these rules. These rules provide, among others, for distraint of movable property to enforce collection.

In regard to the panchayats in the transferred territory, namely Kanyakumari district, the panchayat taxes which accrued up till 31st March 1962 are, however, recoverable under the provisions of the Revenue Recovery Act with reference to section 57 of the Travancore-Cochin Panchayat Act which was then in force in that area. The taxes which accrued after 1st April 1962 is recoverable under the rules made under the Madras Panchayats Act, 1958.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்துக்களின் வரிகளைக் கட்டாயமாக வசூல் செய்துவிட வேண்டுமென்ற உத்தரவுடன் முழு அதிகாரங்களும் ரெவின்யூ அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறதே, அந்த மாதிரி ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, காலாவதியான நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்கு கிராம அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? கொடுக்கப்பட்டிருந்தும் அதன்பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : உத்தரவு தனியாகக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஏறகனவே அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து பிரதேசத்தில் வரி பாக்கியில்லாமல் வசூலிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பழைய பாக்கி தங்கிவிட்டது. அதிகாரிகள் வசூலிக்க தவறியதால் அது ஒரு பெரும் சுமையாக இருக்கிறது. அப்படியுள்ள இடங்களில் பழைய பாக்கியை வஜா செய்துவிட்டு இனிமேலாவது கட்டாயமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வஜா செய்வது என்ற பிரச்சனையே இல்லை. அதையும் வசூல் செய்தால் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் கொடுப்பது என்ற பிரச்சனைதான் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, காலாவதி ஆன நிலுவைகள் என்றால் வசூலிக்கப்பட முடியாத ஒன்று என்று நினைக்கிற நேரத்தில், அதை வசூலிக்க வேண்டுமென்று கலெக்டர் உத்தரவிட்டதன் பேரில் அதனை வசூலிக்க முடியாத கிராமாதிகாரிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த மாதிரித் தகவல் ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Water-supply (Madras City)

*7 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the result of the drilling of test wells in the Cooum and Courtaliyar-Araniyar basins to augment Madras City water-supply?

The Hon. Sri R. VENKATARAMAN : A paper[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், மேஜையின் மீது வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையில் கண்டிருப்பதன்படி பரிட்சைகள் நடந்ததன் நோக்கம் இந்த ஊற்று நீரை நகரத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதா? அப்படியானால் அந்தப் பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்படாதா? அதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படாது என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : கடல் நீரைக் குடிதண்ணீராக மாற்றுவதுபற்றிக் கனம் தொழிலமைச்சர் அவர்கள் பல நிபுணர் களுடன் ஆராய்ச்சி நடத்தியதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா? அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடல் நீரைக் குடி நீராக்கு வது சாத்தியம் என்பதெல்லாம் தீர்மானமாகிவிட்டது. அதை எப்படிச் செய்வது, அதற்கு என்ன செலவாகும் என்பதுதான் இப்போது ஆலோசனையில் இருக்கிறது. இது பற்றி ஒரு முடிவு செய்ய மேல் நாட்டு நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : சென்னை நகரத்தில் தண்ணீர்த் தேவை மிக இன்றியமையாததாக இருக்கிறது. கிணற்று நீரா, காவிரி நீரா, கிருஷ்ணா நீரா, கடல் நீரா என்று இப்படியே ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட இதிலே உடனடியாக ஒரு முடிவு எடுக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆராய்ச்சி செய்யாமல் எந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வருவது என்பதை முடிவு செய்ய இயலாது. கனம் புலவர் அவர்கள் வேறு ஏதாவது தண்ணீரைக் கண்டு பிடித்துச் சொன்னாலும், அதையும் கவனிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னைக்குக் குடிதண்ணீர் வழங்க காவிரியில் இருந்து வீராணம் ஏரிக்கு தண்ணீர் கொண்டுவர பெரிய திட்டத்தைத் தயாரித்து, அதற்கு ஏறக்குறைய 35, 36

---

a Printed as Appendix I on page–116.